ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2034/36 - 2017 සැප්තැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2017.09.01

*2034/36 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 4/81* (XII)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23 ஒ மற்றும் 23 ஓ ஆம் பிரிவுகளுடனும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தத்தின் 51 ஆவது பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும், அச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
*2017, ஓகத்து 30.*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள், 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய சூழல் (குப்பை கூளங்கள் மற்றும் பிளாஸ்டிக் உட்பட்ட வேறு எரியக்கூடிய பொருட்களைத் திறந்த வெளியில் எரித்தலை தடைசெய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* ஆளெவரும் குப்பை கூளங்களையும் பிளாஸ்டிக் உள்ளடங்கலாக வேறு எரியக்கூடிய பொருட்களைத் திறந்தவெளியில் எரிக்கவோ அல்லது எரிக்கச் செய்தலோ அல்லது திறந்தவெளியில் எரித்தலை அனுமதித்தலோ அல்லது எரிக்கவிடுதலோ ஆகாது.

*3.* மேலுள்ள ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகத் தவறும் எவரேனும் ஆள், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் பிரிவு 31 இன்கீழ் தவறொன்றிற்கு ஆளாதலும் தண்டிக்கப்படற்பாலாதலும் வேண்டும்.

*9-364*

1A - PG 3679 — 5007 (2017/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.